## IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM

**EP.14/2009**

**Deposition of Witness** : **CW- 1**

**Name** : முகமது இலியாஸ்

**Father Name** : முகமது இசாத்

**Religion** : முஸ்லிம்

**Caste** : -

**Calling** : கிராம நிர்வாக அலுவலர் தக்கோலம்

**Address** : அரக்கோணம்.

**Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 19.07.2023.**

முதல் விசாரணை சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

1. நான் தக்கோலத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிகிறேன். நீதிமன்றத்தில் இருந்து பஞ்சாட்சரம் நிலம் சம்மந்தமாக ஆவணங்களை எடுத்து வர நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததால் வந்துள்ளேன். அந்த சொத்தின் கதவு எண்.20 ஆகும். வழக்கு சொத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு எல்லைகளும் செக்குபந்தி விவரங்கள் சரியானவை தான். அதில் தான் பஞ்சாட்சரம் குடிசை வீடு கட்டி குடியிருந்து வருகிறார். முதலில் சொத்து கிராம நத்தமாக இருந்தது. பட்டா எண்.1025, சர்வே எண்.439/6டி, 439/8சி, 439/7எ, உரிமையாளர்கள் பெயர்கள் 1. முனுசாமி ரெட்டி மனைவி முனியம்மாள், 2. தனபால் மனைவி தனலட்சுமி, 3.ஆனந்தன் மனைவி பத்மா, 4. ஆனந்தன் மகள் சத்தியா, 5. தனபால் மகள் லீலா, ஆகியோர் பெயரில் பட்டா உள்ளது.

2. மனுதாரர் பஞ்சாட்சரம் சர்வே எண்.439/6டி-யில் குடிசை வீடு கட்டியும், காலியாக சர்வே எண்.439/7ஏ-வும், ஆகிய சர்வே எண்கள் குடிவை வீட்டிற்கு முன்புறம் 439/8சி

உள்ளது. அந்த மனையானது கிழக்கு மேற்கு 16 அடி வடக்கு தெற்கு 150 அடியாகும். அதற்கான ஆவணங்களாக அடங்கல் பதவிவேடு, சிட்டா, புல வரைபடம் உண்மை நகல்களை தாக்கல் செய்கிறேன். அந்த பதிவேடுகள் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு நீதிமன்ற சான்று ஆவணம் Ex.X1 முதல் Ex.X3 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

குறுக்கு விசாரணை :- (எதிர்மனுதாரர் தரப்பில்)

1. நான் எத்தனை வருடமாக கிராம நிர்வாக அலுவலராக தக்கோலத்தில் உள்ளேன் என்றால் 2 மாதமாக உள்ளேன். பஞ்சாட்சரம் வீடு கட்டி வாழ்ந்து வருவது எந்த சர்வே எண் என்றால் 439/6டி ஆகும். பஞ்சாட்சரம் தான் வீடு கட்டினார் என்று எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் கிராம விசாரணையில் தெரியும். எனக்கு வந்த நீதிமன்ற அழைப்பாணையில் கிராம விசாரணை செய்ய சொல்லி நீதிமன்ற உத்திரவில் இருந்ததா என்றால் இல்லை. பஞ்சாட்சரம் சர்வே எண்.439/6டி-யில் உள்ளார் என்று நான் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. சர்வே எண்.439/6டி கிழக்கு மேற்கு 16 அடி வடக்கு தெற்கு 150 அடி என்றும் அதில் வீடு கட்டியுள்ளார் என்று வருவாய் ஆவணங்களில் இல்லை என்றால் ஆவணங்களில் உரிமையாளர் பெயர் தான் வரும். பஞ்சாட்சரம் பெயரில் வருவாய் துறையில் எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.